## பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ விகாரி வருடம் புரட்டாசி மாதம் 11–ம் தேதி திருவள்ளுவராண்டு 2047 (2019–ம் ஆண்டு செப்டம்பர் 27ம் தேதி) புதன் கிழமை காலை 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. என்.பாஸ்கர்.,**
**தனி அலுவலர்/ ஆணையர் (கூ.பொ).**

**பொருள் எண்..1**

இந்நகராட்சியின் 2019–உள்ளாட்சி சாதராண தேர்தல் பணிக்காக மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் 18.09.2019ம் தேதிய தொலைபேசி செய்தியில் கர்நாடக மாநிலம் **Raichur** என்ற ஊரில் உள்ள 1847–எண்ணிக்கை **EVM** இயந்திரங்களை எடுத்து வந்து தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும், அதற்கான இந்நகராட்சியிலிருந்து 4–பணியாளர்கள் மற்றும் 2–காவல் அலுவலர்கள் வாடகை வாகனத்தில் சென்று **EVM** இயந்திரங்களை ஆய்வு செய்து ஒப்படைக்க கோரி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அதற்கான செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும், பின்னர் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திலிருந்து நிதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இடத்திற்கு சென்று வருவதற்கான வாடகை வாகனத்திற்கான செலவுத்தொகை மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு..** | 1.)மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2.) 2019‘–உள்ளாட்சி சாதராண தேர்தலின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்..500/2019/அ4) |

**தீர்மான எண்..226 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..2**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்ட வெளிப்புற பணியாளர்களுக்கு வாகன முன்பணம் ரூ.50,000/–ம் வழங்ககோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. அவ்வாறு வரப்பெற்ற விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பின்வருமாறு.

| வரிசை எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி | இரு சக்கர வாகன முன்பணம் தொகை .ரூ. |
|---|---|---|
| 1. | திரு.எம்.ஜான் எட்வர்டு, சங்கிலியாளர் | ரூ.50,000 |

| | | |
|---|---|---|
| 2. | திரு.ஆர்.சுந்தரமூர்த்தி<br>வருவாய் உதவியாளர் | ரூ.50,000 |
| | **மொத்தம்** | **ரூ.1,00,000** |

அரசாணை எண்..719, (நிதித்துறை) நாள்..13.10.1993 மற்றும் அரசாணை எண்..485 (நிதித்துறை) நாள்..13.01.2005ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு மேற்கண்ட பணியாளர்களுக்கு இரு சக்கர வாகன முன்பணம் ரூ.1,00,000/—ஐ**(Rupees One Lakh only)** வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு.. | 1.)மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2.) மேற்படி, வாகன முன்பணம் ரூ.50,000/—ஐ மாதம் ரூ.1000/— வீதம் 50 சமதவணைகளில் பிடித்தம் செய்யவும், அதற்குண்டான வட்டி ரூ.8500/—ஐ மாதம் ரூ.850/— வீதம் 10 சமதவணைகளில் பிடித்தம் செய்யவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்..7547/2013/அ4) |

**தீர்மான எண்..227 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..3</u>**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பாப்பாவெளி பாளையக்கோட்டை கிராமம் வார்டு—B, பிளாக் — 46 நகர புலஎண்..12/6,8 13/3,4,5 ஆகியவற்றில் அடங்கிய இடமானது வளவன்புரம் தெரு, மதுக்கூர் ரோடு மெயின் சாலையிலிருந்து பிரிந்து மேற்கு நோக்கி செல்லும் தார் சாலையானது, சாலையாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி சாலையினை அணுகு சாலையாகக் கொண்டு, மேற்படி சாலையின் பின்பகுதியில் நகர் ஊரமைப்பு துறையின் உரிய மனைப்பிரிவு அனுமதி பெற்று மனைப்பிரிவு அமைக்க உள்ளதாக அவ்விடத்தின் உரிமையாளர் திரு.என்.வீரபாண்டியன் த/பெ.நமசு வேளாளர், நாட்டுச்சாலை அஞ்சல், பட்டுக்கோட்டைவட்டம் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். மனுதாரரின் இடத்தில் மனைப்பிரிவு அமைக்க மதுக்கூர் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலையின்அகலமானது குறைவாக உள்ளதால், மேற்படி சாலையினை மக்களின் பயன்பாட்டிற்காக அகலப்படுத்த வேண்டியுள்ளது. எனவே மேற்படி மதுக்கூர் சாலையிலிருந்து பிரிந்து மேற்கு நோக்கி செல்லும் தார் சாலை கிழக்கில் 5.20 மீட்டர் அகலமும் மேற்கில் 6.0மீட்டர் அகலமும் நீளம் முறையே வடக்கு பக்கம் 74.6மீட்டரும், தெற்கில் 72.0 மீட்டரும் உள்ளது. நிலவியல் சாலையாக சர்வே ஆவணங்களில் பதிவாகி உள்ளது. அதன் தொடர்ச்சியாக சாலை விரிவாக்கத்திற்கு ஏற்கனவே உள்ள சாலையினை ஒட்டினாற்போல் வடக்கில் சர்வே வரைபடத்தின்படி, முக்கோண வடிவுள்ள 1495 சதுர அடி பரப்பளவுள்ள சாலை இடமும் மற்றும் மேற்படி நிலவியலில் உள்ள சாலையின் மேற்கு பக்கத்தில் வரைபடத்தின்படி தென் வடல் இருபுறமும் 6.0 + 1.20 = 7.20மீ அகலமும், கிழ மேலாக வடக்கில் 23.7 மீட்டரும், தெற்கில் 24.00 மீட்டரும்,

ஆகக் கூடுதல் பரப்பு 1846 சதுர அடியும், ஆக இனம் இரண்டிற்கான சாலை இடங்களின் கூடுதல் பரப்பு 1495 சதுர அடி + 1846 சதுர அடி = 3341 சதுர அடி பரப்பளவு கொண்ட சாலை இடத்தினை பொது நலன் கருதி இனாம் சாசனம் ஆவணம் மூலம் நகராட்சி ஆணைரின் பெயரில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய அதன் உரிமையாளர்கள் திரு.R. தம்பி அய்யன் மற்றும் திரு. N.வீரபாண்டியன் ஆகியோர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி 3341 சதுர அடி பரப்பளவுள்ள இடத்தினை பொது மக்களின் நலன் கருதி, நகராட்சிக்கு தானமாக பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு..</u>

நிலவியலில் உள்ள சாலையை தவிர தானமாக பெறும் சாலைக்கான நிலத்தில் தேவையான அடிப்படை வசதிகளை மனுதாரர் வார்டு–B, பிளாக்–45, நகர புலஎண்கள்..12,18,19,20,21/1, 39/1,105 மற்றும் வார்டு–B, பிளாக்–46, நகர புலஎண்..12/8 பரப்பு 2.49 ஏக்கர் பரப்பளவில் அமைக்கும் தமது புதிய உத்தேச மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்யும்போது இதையும் சேர்த்து பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்..3986/19/எப்1)

**தீர்மான எண்..228 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

<u>பொருள் எண்..4</u>

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை–2019 ன் கீழ் நகரில் ஆங்காங்கே மழையினால் கொசுக்கள் உருவாகி அதனால் பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு (DBC) பணிகள் மேற்கொள்ள (15.7.2019 முதல் 14.10.2019 முடிய) உள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்கவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், இப்பணிகளை மகளிர் சுய உதவிக்குழுக்கான கோட்டம்–1 க்கு சமத்துவ மகளிர் சுயஉதவிக்குழு, ஆணைவிழுந்தான் குளத்தெரு, பட்டுக்கோட்டை கோட்டம்–2 க்கு அதிர்ஷ்ட லெட்சுமி மகளிர் சுயஉதவிக்குழு, வெண்டாக்கோட்டை ரோடு, வளவன்புரம், பட்டுக்கோட்டை, கோட்டம்–3 க்கு அம்மன் சுயஉதவிக்குழு, கோட்டை அல்லாகோவில்தெரு, பட்டுக்கோட்டை மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.4032/2019/எச்.1)

**தீர்மான எண்..229 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

<u>பொருள் எண்..5</u>

நகராட்சி வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 25.09.2019 தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி (விலை விகிதம்) |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் TN-49 AA-5707 டிப்பர் லாரிக்கு 2019–2020 ஆம் ஆண்டுக்கு தகுதிசான்று (FC) பெற்றுதரும் பணிகள் செய்து தருதல் | 3,00,000/– | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, செங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | ரூ.2,98,400/– |
| | | | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், ஐந்துதலை வாய்க்கால், கும்பகோணம், | ரூ.3,05,900/– |
| | | | குரு ஆட்டோ கேரேஜ், ராஜீவ் நகர், தொம்பன்குடிசை, 3, நாகை ரோடு, தஞ்சாவூர். | ரூ.3,16,700/– |

| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
|---|---|
| | 2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவ்டிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.<br>**(ந.க.எண்.2372/2019/எச்.1)** |

**தீர்மான எண்..230 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

<u>பொருள் எண்..6</u>

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனம் TN-49 AZ-7628 டம்பர்பிளேசரில் உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதால் வாகனம் இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு பேட்டரி புதியதாக வாங்கி பொருத்தி வாகனத்தினை இயக்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு.. | 1) பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4011/2019/எச்.1) |

**தீர்மான எண்..231 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..7**

நகராட்சி வருவாய் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 25.09.2019 தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பொதுசுகாதார பிரிவு வாகனம் TN-49 AZ-7628 டெம்பர்பிளேசர்க்கு புதியதாக பேட்டரி சப்ளை செய்யும் பணி | 15,000/– | ரவி பேட்டரி சென்டர், 132, அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை. | ரூ.14,500/– |
| | | | பவர்டெக் பேட்டரி, 9, அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை. | ரூ.14,800/– |
| | | | அங்கப்பன்பேட்டரி சென்டர், 106/8எப், அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை. | ரூ.15,000/– |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.4011/2019/எச்.1) |

**தீர்மான எண்..232 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..8**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு காய்ச்சல் மற்றும் முதிர் கொசுக்களால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு புகையடிக்கும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த புகையடிக்கும் இயந்திரங்கள் வாங்கி ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆனாதால் தற்சமயம் பழுதடைந்து இயக்க முடியாத சூழ்நிலையினாதால், தற்பொழுது வடகிழக்கு பருவமழை–2019 ஏற்பட்டுள்ளதால் நகரின் உள்ள பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டும், காய்ச்சல் மற்றும் டெங்கு நோய்கள் ஏற்படாமல் இருக்க பாதுகாப்புக்காக புகை அடிக்கும் பணி மேற்கொள்ள புதியதாக Indoor Fogging Machine 9 எண்ணிக்கையும், 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொளில் அமர்ந்தும் மற்றும் சைக்கிளில் வைத்து புகை அடிக்கக்கூடிய இயந்திரம் 3 எண்ணிக்கையும் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– க்கு மற்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். |
| | 2) அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4127/2019/எச்.1) |

**தீர்மான எண்..233 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..9</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து வாங்கி நகரில் உள்ள OCC, MCC மையத்திற்கு கொண்டு செல்ல BOV வாகனத்தில் இரு நிற கூடை bucket உடன் குப்பைகளை வாங்கவும், LCV வாகனத்தில் குப்பைகளை தரம் பிரித்து வாங்க நல்லதொரு தரமான 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட Oil bucket தேவைபடுவதனால், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள LCV, BOV வாகனம் மற்றும் Tipper Lorry க்கு சேர்த்து 48 எண்ணிக்கை bucket வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/– க்கு மற்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு.. | 1) பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4128/2019/எச்.1) |

**தீர்மான எண்..234 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..10</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நகரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு கீழ்கண்ட விபரப்படியான உபகரணங்கள் தேவைபடுவதனால் அவசர அவசியம் கருதி கீழ்கண்டவாறு,

| வ.எண் | பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மிளிரும் மேலாடை | 300 |
| 2. | கையுரை | 200 |
| 3. | காலுரை | 50 |
| 4. | முடிகவசம் | 200 |
| 5. | மழைகோட்டு | 200 |

மேற்காணும் பொருட்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000,/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.4129/2019/எச்.1)

**தீர்மான எண்..235 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..11</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தினசரி சிறப்பு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு கீழ்கண்ட விபரப்படியான உபகரணங்கள் தேவைபடுவதனால் அவசர அவசியம் கருதி கீழ்கண்டவாறு,.

| வ.எண் | பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ரோடு மண் தள்ளும் பிரஷ் | 200 |
| 2. | விளக்குமாறு | 500 |
| 3. | மூங்கில் கூட்டு மிளார் | 300 |
| 4. | அன்னகூடை | 300 |
| 5. | கடப்பாரை | 15 |
| 6. | சாக்கடை சுரண்டி | 30 |
| 7. | கம்பிமுள்சுரண்டி (கொக்கரை) | 30 |

மேற்காணும் பொருட்கள் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.4130/2019/எச்.1)

**தீர்மான எண்..236 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..12</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரபிரிவு துப்புரவு பணியாளர் திரு பி.சங்கர் மற்றும் 14 நபர்களால் தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.18351 of 2013 W.P.(MD) No.2 of 2015 நடைபெற்று வருகிறது. இவ்வழக்கினை அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு பி.குணசீலன்முத்தையா அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு வழக்கறிஞர் கட்டணமான ரூ.9500/–ஐ வழக்கு கட்டணமான வழங்க கோரியுள்ளார். எனவே, வழக்கு கட்டணம் ரூ.9500/–ஐ அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு பி.குணசீலன்முத்தையா அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பொதுநிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.7367/2013/எச்.1)

**தீர்மான எண்..237 . . . அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..13</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளி உள்ள 40 பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும், பொதுமக்களுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்கும் பொருட்டு மருத்துவ முகாம் அமைத்து நகராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நில வேம்பு குடிநீர் வழங்குவதற்கு தேவைப்படும் 200 கிலோ நிலவேம்பு பவுடர் அரசு நிறுவனமான டாம்கால் நிறுவனத்தனரிடமிருந்து நேரடியாக சப்ளை செய்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நிலவேம்பு பவுடர் 200 கிலோ அரசு நிறுவனமான டாம்கால் நிறுவனத்தாரிடமிருந்து நேரடியே சப்ளை செய்யும் பொருட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.8273/2016/எச்.1)

**தீர்மான எண்..238 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..14</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்க திட்டத்திற்காக மக்காத குப்பைகள் தினசரி பெறப்படுவதை சேகரித்து வைத்து அரியலுார் சிமின்ட் பேக்டரிக்கு அனுப்பப்படுகிறது. தினசரி சேகரமாகும் மக்காத குப்பைகளை சேகரிக்க போரா சாக்கு தினந்தோறும் தேவைப்படுகிறத. ஆகவே, ஒரு வருடத்திற்கு சுமார் 6000 சாக்குகள் தேவைப்படுகிறது. ஆகவே, போரா சாக்குகள் வாஙகிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4197/2019/எச்.1) |

**தீர்மான எண்..239 . . . அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..15</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரபிரிவு கொசுப்புழு மற்றும் முதிர் கொசுக்களை ஒழிப்பதற்கு தேவையான பாக்டிசைடு மற்றும் பைத்திரம் மற்றும் கொசு ஒழிப்பு சம்மந்தமான மருந்துகள் வாங்க 2019–2020 ம் ஆண்டுக்கு TNMSC (தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம்) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1403/2019/எச்.1)

**தீர்மான எண்..240 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..16**

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோக பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகள், உடைப்புகள், வால்வுகள் போன்றவற்றில் பழுதுகள் ஏற்பட்டால் அவற்றினை சரிசெய்யும் வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் பணிக்கு 30.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகள் , உடைப்புகள், வால்வுகள் போன்றவற்றில் பழுதுகள் ஏற்பட்டால் அவற்றினை சரிசெய்யும் வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | ரூ.6,50,000/– | கே.எடிசன் பட்டுக்கோட்டை | 0.05 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 1.18% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன், பட்டுக்கோட்டை ஒப்பந்ததாரர் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே கே.எடிசன், பட்டுக்கோட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) குடிநீர் திட்ட பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3065 /2019/இ1) |

**தீர்மான எண்..241 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

<u>பொருள் எண்..17</u>

பட்டுக்கோட்டை நகராட்சி கஜா புயலால் பாதிக்கப்பட்ட மின்கம்பங்களில் உள்ள LED விளக்குகளின் உபகரணங்களை மாற்றம் செய்யும் பணிக்கு 19.09.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளிகளின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | கஜா புயலால் பாதிக்கப்பட்ட மின்கம்பங்களில் உள்ள LED விளக்குகளின் உபகரணங்களை மாற்றம் செய்யும் பணி | ரூ.1,90,000/– | பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி | 1,87,920/– |
| | | | காவியா எண்டர்பிரைசஸ், மன்னார்குடி | 1,96,274/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை M/s. பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி நிறுவனம் அளித்துள்ளது. இவ்விலைப்புள்ளியானது காவியா எண்டர்பிரைசஸ், மன்னார்குடி நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளது. ஆகவே M/s. பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி நிறுவனம் விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) தெருவிளக்கு அத்தியாவசிய பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 3495 /2019/இ1) |

**தீர்மான எண்..242 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..18**

பட்டுக்கோட்டை நகராட்சி நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள மினி பவர் பம்ப்களில் புதிதாக HDPE டேங்க் பொருத்தும் பணிக்கு **16.09.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள மினி பவர் பம்ப்களில் புதிதாக HDPE டேங்க் பொருத்தும் பணி | ரூ.6,00,000/- | எம்.பாலமுருகன், வேதாரண்யம் | 4.97 % அதிகம் |
| | | | ஆர்.எம். இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோயம்புத்தூர் | 6.49 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எம்.பாலமுருகன், வேதாரண்யம் ஒப்பந்ததாரர் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது ஆர்.எம் இன்ஜினியரிங் ஓர்க்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எம்.பாலமுருகன், வேதாரண்யம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) குடிநீர் திட்ட பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.. /2019/இ.1) |

**தீர்மான எண்..243 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..19**

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோக மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளான, காயில் ரீவைண்டிங், பம்ப் பாகங்கள் மாற்றுதல், ஸ்டாட்டர் உபகரணங்கள் பொருத்துதல் போன்றவற்றினை வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் பணிக்கு **30.08.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளான, காயில் ரீவைண்டிங், பம்ப் பாகங்கள் மாற்றுதல் , ஸ்டாட்டர் உபகரணங்கள் பொருத்துதல் போன்றவற்றினை வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல | ரூ.9,00,000/– | பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை | **0.39 % குறைவு** |
| | | | கே.எடிசன் பட்டுக்கோட்டை | **4.15 % அதிகம்** |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை ஒப்பந்ததாரர் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) குடிநீர் திட்ட பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.3065 /2019/இ.1) |

**தீர்மான எண்..244 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

**<u>பொருள் எண்..20</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–5 அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 7234/2014/ஆர், நாள்15.03.2018ன்படியும் தமிழ்நாடு அரசிதழ் எண்.133 நாள்.2501.2018ன் படியும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடஙகள் மீது சொத்துவரி வரி விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதன்அடிப்படையில் 18 தனியார் பள்ளிகளுக்கு 28 வரி விதிப்புகளுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. அதில் புனித தாமஸ் மேல்நிலைப்பள்ளி, இசபெல் பெண்கள் மேல் நிலைப்பள்ளி,புனிதா ஜோசப் நர்சரி அண்டு பிரைமரி பள்ளி, பான்செக்கர்ஸ் பப்ளிக் பள்ளி ஆகியவைகளுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளதை

எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W .P.(MD) No.15781 of 2019, W .P.(MD) No.15768 of 2019, W .P.(MD) No.15542 of 2019, W .P.(MD) No.15540 of 2019 எண்ணில் வழக்கு தொடப்பட்டுள்ளது. எனவே அதனை எதிர்த்து நகராட்சி மூலம் எதிர்வழக்காட ஆகும் செலவிற்கும் இவ்வழக்கினை திரு.எம்.கண்ணன் வழக்கறிஞர் அவர்கள் மூலம் நடத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழஙகலாம்<br>(ந.க.எண்.3280/2019/அ2) |

**தீர்மான எண்..245 . . . அனுமதிக்கப்பட்டது . . .**

**பொருள் எண்..21**

அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997 ல் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளில் துப்புரவு பணியாளர்கள் அந்தந்த நகராட்சியின் எல்லை மற்றும் மொத்தவீடுகள் மற்றும் திடக்கழிவு பணிகளை பராமரித்திட துப்புரவு பணியாளர்கள் பணியிடம் தோற்றுவிக்க அளவுகோல் மறு நிர்ணயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதன்பேரில், பட்டுக்கோட்டை நகராட்சியில் புதியதாக துப்புரவு பணியாளர்கள் நிர்ணயம் செய்ய கணக்கெடுப்பு செய்து உரிய மன்ற அனுமதியோடு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய வழி முறையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் அ.தி.மு.எண்.2736/2019/அ.3 நாள்.5.9.2019 ல் துப்புரவு பணியாளர்களுக்கான பயோ மெட்ரிக் வருகைப்பதிவேடு நகலுடன் அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ளதன்பேரில், பட்டுக்கோட்டை நகராட்சியில் உள்ள மூன்று கோட்டத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் மூலம் குழு துப்புரவு பணியாளர்களுக்கு பயோ மெட்ரிக் வருகைபதிவு செய்திடும் பொருட்டு புதியதாக பயோமெட்ரிக் வருகை பதிவேடு எடுக்க வேண்டிய பயோ மெட்ரிக் வருகை பதிவு இயந்திரம் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பொதுநிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.5252/2018/எச்.1)

**தீர்மான எண்..246 . . . அனுமதிக்கப்பட்டது . . .**

ஒம்/என்.பாஸ்கர்
ஆணையர்/தனி அலுவலர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.

**<u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>**

**ஸ்ரீ விகாரி வருடம் புரட்டாசி மாதம் 3–ம் தேதி திருவள்ளுவராண்டு 2047 (2019–ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி) வெள்ளிக் கிழமை காலை 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. என்.பாஸ்கர்.,**
**தனி அலுவலர்/ ஆணையர் (கூ.பொ).**

**<u>பொருள் எண்..1</u>**

இந்நகராட்சி சாந்தாங்காடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 40எச்.பி மோட்டாரினை ரீவைண்டிங் செய்யும் பணிக்கு 3.9.19 அன்று கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1. | பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ்,<br>52/C, வண்டிப்பேட்டை எதிரில்,<br>பட்டுக்கோட்டை. | 46,000– |
| 2. | கணேஷ் ரீவைண்டிங் ஒர்க்ஸ்,<br>பட்டுக்கோட்டை. | 47,500– |

மேற்கண்ட வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை நிறுவன குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2) குடிநீர் விநியோகப் பணியின் அத்தியாவசியம் கருதி உத்தேச மதிப்பீடு ரூ.46,000/–க்கு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| | 3) குடிநீர் நிதி மூலம் செலவினம் மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>(ந.க.எண்..3836/19/இ1) |

**தீர்மான எண்..224 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

ஒம்/என்.பாஸ்கர்
ஆணையர்/தனி அலுவலர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.

**பட்டுக்கோட்டை நகராட்சி**

**ஸ்ரீ விகாரி வருடம் புரட்டாசி மாதம் 3–ம் தேதி திருவள்ளுவராண்டு 2047 (2019–ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி) வெள்ளிக் கிழமை காலை 1.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. என்.பாஸ்கர்.,**
**தனி அலுவலர்/ ஆணையர் (கூ.பொ).**

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர் (FAC) , நகர் நிர்வாக அலுவலர் வளாகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17349/2019/இ.3, நாள்.03.09.2019 ன் படி பட்டுக்கோட்டை நகராட்சி TURIP – 2019-20 திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.500.00 இலட்சத்திற்கு TURIP- 125.00 இலட்சம் , SFC/CFC/Land Regularisation fund – 275.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.100.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஆதாரத்தை கொண்டு கீழ்கண்ட விபரப்படியான சாலைகள் மராமத்து செய்து மேம்பாடு செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No. | W. No. | Name of Work | Type of Work (BT/ CC) | Length in KM | Width in Meter | Estimate Cost Rs. Lakhs |
|---|---|---|---|---|---|---|
| **PACKAGE – I** | | | | | | |
| **1** | **10** | Ward.10 Pappaveli palayakottai main road | **BT** | **0.750** | **4.00** | **200.00** |
| **2** | **23** | Ward.23 Anna nagar main road | **BT** | **0.170** | **4.00** | |
| **3** | **25** | Ward.25 AL nagar | **BT** | **0.450** | **4.50** | |
| **4** | **27** | Ward.27 Karikadu Vadakku veli | **BT** | **0.550** | **4.50** | |
| **5** | **27** | Ward.27 N.R Garden | **BT** | **0.600** | **4.00** | |
| **6** | **28** | Ward.28 Natesan street | **BT** | **0.180** | **4.00** | |
| **7** | **27** | Ward.27 Thairiyam pillai street | **BT** | **0.320** | **4.00** | |
| **8** | **30** | Ward.30 Pasumpon nagar | **BT** | **0.420** | **4.50** | |
| **PACKAGE – II** | | | | | | |
| **1** | **13** | Ward.13 Kasankulam 1st lane | **BT** | **0.120** | **6.00** | **200.00** |
| **2** | **16** | Ward.16 Rajappa nagar | **BT** | **0.450** | **4.50** | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3** | **20** | Ward.20 Throwpathi amman koil street | **BT** | **0.310** | **6.00** | |
| **4** | **24** | Ward.24 Old bus stand road | **BT** | **0.150** | **5.00** | |
| **5** | **31** | Ward.31 PSS Nagar | **BT** | **0.570** | **4.00** | |
| **6** | **31** | Ward.31 Arivu nagar | **BT** | **0.250** | **4.50** | |
| **7** | **31** | Ward.31 Letchathoppu mariyamman koil road | **BT** | **0.750** | **4.50** | |
| **8** | **31** | Ward.31 Burial ground road | **BT** | **0.220** | **4.00** | |
| **9** | **32** | Ward.32 Muthu nagar | **BT** | **0.400** | **4.50** | |
| **PACKAGE – III** | | | | | | |
| **1** | **23** | Ward.23 Hospital road | **BT** | **0.316** | **4.00** | **100.00** |
| **2** | **27** | Ward.27 SMS avenue cross street | **BT** | **0.650** | **4.00** | |
| **3** | **33** | Ward.33 Perumal koil street to melatheru river bund east side road | **BT** | **0.600** | **4.00** | |
| | | **TOTAL** | | **8.226** | | **500.00** |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) நகராட்சி நிர்வாக ஆணையர் (FAC) , சென்னை அவர்களது கடிதத்தில் தெரிவித்துள்ள நிதி ஒதுக்கீட்டின்படி சாலைகள் மேம்பாட்டு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3385 /2019/இ.1)

**தீர்மான எண்..225 . . . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது . . .**

ஒம்/என்.பாஸ்கர்
ஆணையர்/தனி அலுவலர்
பட்டுக்கோட்டை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி.